International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 - 2 April - June 2026

Published on 14, April - June 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# சங்க இலக்கியம் குறிப்பிடும் கலனில் வம்பலர்

**அ. சகாய ஜெசி கலா**
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ் இலக்கியத்துறை, சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை - 600 005

**கட்டுரைச் சாரம்**

வழிப்போக்கர்களை அம்பெய்தி கொலைத் தொழில் செய்து, அவர்கள் கொண்டு வருகின்ற பொருட்களைக் கொள்ளையிடும் மறவர்கள் பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியத்தில் பல இடங்களில் வருகின்றன. இவ்வழிப்போக்கர்களைக் குறிக்கும் சொல்லாக இலக்கியத்தில் **வம்பலர்** என்ற சொல்லாடல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வம்பலர்களைக் கொலைச் செய்யும் ஆறலைக் கள்வர்கள், பொருளுக்காக மட்டுமல்லாது பொருள் இல்லாவிடினும் தம் திறத்தைக் காட்ட புதியவர்களைக் கொலைச் செய்யும் வழக்கம் உடையவர்களாகச் சங்க இலக்கியம் குறிப்பிடுகின்றன. **ஆறலைக் கள்வர்** என்ற சொல்லாடல் பொருநராற்றுப்படை (அடி: 21) என்ற ஒரு இலக்கியத்தில் மட்டுமே வருகின்றன. ஆனால் அவர்களைக் குறித்த தகவல்கள் **கொடும் தொழில் மறவர், கடுங்கண் மறவர், கொடுமர மறவர், வல்வில் மறவர், அஞ்சா மறவர், கல்லா இளைஞர்** போன்ற சொற்றொடரில் பல்வேறு இடங்களில் வருகின்றன. பொருளுக்காகவும் போருக்காகவும் மட்டுமே மறவர்கள் வழிப்போக்கர்களைக் கொலைச் செய்து அவர்களுக்கு பதுக்கை, நடுகல் போன்ற ஈமச்சின்னங்கள் அமைத்து உள்ளதாக அதிகம் பேசப்பட்டு வரும் சூழலில் பொருள் இல்லாவிடினும் பல காரணங்களால் வழிப்போக்கர்கள் கொல்லப்பட்டு வந்துள்ளனர். இவற்றைக் குறித்து இலக்கியத் தரவுகளோடு இக்கட்டுரை ஆராய்கின்றது.

**வம்பலர்**

பாட்டும் தொகையும் வம்பலர் என்ற சொல்லிற்கு பின்வரும் விளக்கங்களைத் தருகின்றன.

| | |
|---|---|
| வம்ப மாக்கள் | – அயல்நாட்டு மக்கள் (நற்: 164, 298) |
| வம்ப மள்ளர் | – புதிய வீரர் (புறம்: 77,78,79) |
| வம்பப் பெரும் புயல் | – புதிய மழை (புறம்: 325) |
| வம்பலர் | – வழிப்போவார் (32 பாடல்கள் உள்ளன) |
| வம்பலன் | – புதியோன், வழிப்போக்கன் (புறம்: 307) |

**வம்ப வேந்தன் – புதிய வேந்தன்**
(புறம்: 287)[1]

இவ்விளக்கங்களைக் கொண்டு காணும் போது வம்பலர் என்பவர் **புதிதாக அவ்வழியில் வருகின்ற வழிப்போக்கர்** என்பது விளங்கு கின்றது. சங்க இலக்கியமான எட்டுத்கையில் **29** இடங்களில் வம்பலர் என்ற சொல் பயின்று வருகிறது. அவர்கள் **ஆறுசெல் வம்பலர், உலந்த வம்பலர், நெறிசெல் வம்பலர், நீர்நிசை வம்பலர், கணைவீழ் வம்பலர், வருவழி வம்பலர், வெம்கால் வம்பலர்** எனப் பல பெயர்களில் அழைக்கப் பட்டுள்ளனர். இந்த வம்பலர்களைக் கொன்ற ஆறலைப்போர் எத்தகு கடுமை யானவர்கள் என்பதை முதலில் அறிய வேண்டியது அவசியமாகின்றது.

**ஆறலைப்போர்**

மறவர்கள் ஆறலைக் கள்வர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். அவர்கள் தங்கள் ஆயுதங்களை அங்குள்ள சிறிய நீர் ஓடையில் கழுவியதனால் அந்த நீர் முழுக்கச் சிவந்த நிறமாகக் காணப்படுகிறது என்பதை பின்வரும் அகநானூற்றுப் பாடல் விளக்குகிறது.

**நெறிசெல் வம்பலர்க் கொன்ற தெவ்வர்**
**எறிபடை கழீஇய சேயரிச் சின்னீர்**
**அறுதுறை யயிர்மணல் படுகரைப் போகிச்**
**சேயர் என்றலில் சிறுமை யுற்றவென்**
**கையறு நெஞ்சத் தெவ்வம் நீங்க**
(அகம்.113:18-22)

இதன் மூலம் ஆறலைப்போர் எத்தகைய கடினத்தன்மை வாய்ந்தவர்களாக இருந்திருந்தனர் என்பதை இப்பாடல் மூலம் அறிய முடிகிறது. மேலும்,

**மாறுநின்று இறந்த ஆறுசெல் வம்பலர்**
**உவல்இடு பதுக்கை ஊரின் தோன்றும்**
**கல்உயர் நனந்தலை நல்ல கூறி**
(குறுந்.297:3-6)

என்ற பாடல் எதிர்த்து நின்று போரிட்டு இறந்த வழிச்செல்வோர் மீது மறவர்கள் தழைகளை இட்டு மூடிய குவியல்கள் ஓர் ஊரைப் போலத் தோற்றம் அளிப்பதாக விளக்குகின்றது. மறவர்கள் வழிப்போக்கர்க ளிடம் பறித்த பொருட்களைத் தங்களுக்குள் பகிர்ந்துக் கொண்ட செய்தியனை பின்வரும் பாடல் விளக்குகின்றது.

**ஆறுசெல் வம்பலர் தொலைய மாறுநின்று**
**கொடுஞ்சிலை மறவர் கடறுகூட் டுண்ணும்**
(குறுந். : 331)

இதைப் போன்றே **நற்றிணைப் பாடல் (352)** அன்பில்லாத ஆடவர் இலை வடிவில் உள்ள அம்பினை வில்லில் சிறப்பாகப் பொருத்தி, வழியில் வரும் புதியவரைக் கொன்று அவர்களின் உடலினை அப்படியே விட்டுச் செல்வர். அவ்வுடலின் நிணத்தை விரும்பி உண்ணும் கிழட்டு நரி ஊனை நிறைய உண்டு நீர் வேட்கையால் அழைந்து எங்கும் நீர் கிடைக்காமல் வருத்தமுற்று திரியும் கொடிய வழியில் தலைவன் சென்றுள்ளான் என குறிப்பிடுகிறது. வழிப்போக்கர்கள் இவ்வாறாக கொலைச் செய்யப்பட்ட செய்தியோடு மட்டுமல்லாமல் அவர்கள் நன்கு உபசரிக்கப்பட்டும் உள்ளனர் என்பதை பின்வரும் புறநானூறு பாடல் விளக்குகிறது. எழினி என்பானின் சிறப்பினைக் கூறுமிடத்து,

**வெங்கால் வம்பலர் வேண்டு புலத்து**
**உறையவும்**
**களம் மலி குப்பை காப்பு இல வைகவும்**
**விலங்கு பகை கடிந்த கலங்காச்**
**செங்கோல்** (புறம்: 230)

என்று வருகிறது. அவனுடைய ஆட்சியில் சூடேறியக் கால்களுடன் நடந்து வருகின்ற வழிப்போக்கர்கள் தாம் விரும்பிய இடங்களில் தங்க வேண்டி பல ஏற்பாடு செய்திருந்ததற்கான தரவுகள் சங்க இலக்கியத்தில் உள்ளன.

**கலனிலர் வம்பலர்**

மேற்குறிப்பிட்ட தரவுகளின் அடிப்படையில் பொருட்களோடு வரும் புதிய வழிப் போக்கர்களைக் கொன்று அவர்கள் கொண்டு வந்த பொருட்களைக் கவர்ந்து கொலைச் செய்து, இறந்தவர்களின் உடலினை இலைகள் மற்றும் கற்குவியலைக் கொண்டு மூடியும் அல்லது

அப்படியே வெட்ட வெளியில் வீசியும் வைத்துள்ளனர் என்பது தெளிவுறத் தெரிகிறது. இவ்வாறு வைக்கப்படும் இடம் பதுக்கை என்ற பெருங்கற்காலச் சின்னத்தினைக் குறிக்கிறது. இந்த வம்பலர் குறித்த இலக்கியத் தரவுகளின் அடிப்படையில் ஆறலைக் கள்வர்கள் பொருட்களோடு வரும் வழிப்போக்கர்களை மட்டுமே கொலைச் செய்யவில்லை. மாறாக பொருள் இன்றி அவ்வழியில் வரும் புதியோரையும் கொன்று உள்ளனர். அதற்கான காரணங்களாகப் பின்வரும் பாடல்கள் விளக்குகின்றன.

**அம்பு தொடை அமைதி காண்மார், வம்பலர்**

**கலன் இலர் ஆயினும் கொன்று, புள் ஊட்டும்**

**கல்லா இளையர் கலித்த கவலை,**

**கண நரி இன்னொடு குழீஇ, நிணன் அருந்தும்** (அகம்: 375)

புதியராய் வருவோர் பொருட்கள் இல்லாதவ ராயினும் தாம் அம்பு விடும் சிறப்பினைக் பிறருக்கு காட்டும் பொருட்டு அவர்கள் மேல் அம்பெய்தி கொன்று அவ்வுடலினை பறவை களுக்கு உணவாக கொடுக்கும் அளவிற்கு, கொலைத் தொழிலை தவிர வேறொரு தொழிலை அறியாத கல்லா இளைஞர் வாழும் கவர்ந்த நெறி என இப்பாடல் கூறுகிறது. **கலன் இலர் ஆயினும்** என்பதற்கு **ஆபரணங்கள் இல்லாதவர் ஆயினும்**[2] என ந.சி. கந்தையா அவர்களும் **அணிகலன் இல்லாதவராயினும்**[3] என ந.மு. வேங்கடசாமி அவர்களும் விளக்கம் தருகிறார்கள். **கலன்** என்பதற்கு பாட்டும் தொகையும் கப்பல், யாழ், மிடா[4] என்ற பொருளையும் **கலம்** என்பதற்கு கப்பல், ஆபரணம், ஆயுதம்[5] எனப் பொருளையும் தருகின்றன. வம்பலர் குறித்த பாடல்களில் கலன் என்ற சொல்லாடலே பயின்று வந்துள்ள நிலையில், கலன் என்ற சொல்லும் பொருள் மற்றும் ஆபரணங்களைக் குறிக்கும் என்பதற்கு சான்றாகச் சங்க இலக்கியத்தில் பல பாடல்கள் உள்ளன. அவற்றில் சில,

**நல் கலன் ஈயும் நாள் மகிழ் இருக்கை** - அகம்: 76

**உணங்கு கலன் ஆழியின் தோன்றும்** - புறம்: 338

**நிலம் கலன் ஆக இலங்கு பலி மிசையும்** - புறம்: 363

**மணி கலன் நிறைந்த மணம் நாறு தேறல்** - புறம்: 397

என்பன. மறவர்கள் மட்டுமின்றி அறன் இல்லாத வேந்தன் ஆட்சி செய்த பகுதியும் கையில் பொருள் இல்லாத வழிப்போக்கர் களைகட கொன்றுள்ளனர் என்பதைப் பின்வரும் பாடல் குறிக்கிறது.

**<u>கைப்பொருள் இல்லை ஆயினும்</u>, மெய்க் கொண்டு**

**இன் உயிர் செகாஅர் விட்டு அகல் தப்பதற்குப்**

**பெருங்களிற்று மருப்பொடு வரிஅதள் தப்பற்குப்**

**அறன்இல் வேந்தன் ஆளும்**

**வறன் உறு குன்றம் பல விலங்கினவே** (அகம்: 109)

அதாவது, அறியாமல் அவ்வழியில் வந்த வழிப்போக்கரின் கையில் பொருள் இல்லா விடினும் அவர்தம் உடலினைப் பற்றிக் கொண்டு உயிரினைக் கொல்லாராய் விட்டு தப்பிச் செல்லாமல் பாதி உயிராக விடும் அளவிற்கு கொடுமையான மறவர்கள் வாழக் கூடிய பகுதியாகத் தலைவன் சென்ற பாதை உள்ளது.மேலும், இவர்களிடம் பெரிய யானையின் கொம்பையும் புலியின் தோலையும் வரியாக வாங்கும் அறனில்லாத அரசன் ஆளும் வறட்சியுற்ற பகுதியாக இருந்துள்ளதை இப்பாடல் குறிப்பிடுகிறது. கலித்தொகைப் பாடல் ஒன்று தன் அம்புத் திறத்தினைக் காட்டுவதைக் காட்டிலும் வழிப்போக்கர்கள் தன் அம்புபட்டு துடித்து சாகுவதைப் பார்ப்பதற்காகவே அவர்களைக் கொலைச் செய்துள்ளனர் என்பதை,

**அற்றம்பார்த் தல்கும் கடுங்கண் மறவர்தம்**

**கொள்ளும் <u>பொருளிலர் ஆயினும் வம்பலர்</u>**

**<u>துள்ளுநர்க் காண்மார்</u> தொடர்ந்துயிர்**

வெளவலின்
புள்ளும் வழங்காப் புலம்புகொள்
ஆரிடை.... (கலி: 4)

காலம் பார்த்து மறைந்திருக்கும் கடுமையான கண்களையுடைய மறவர்கள், தாம் அடைதற்கு ஏற்ற பொருள் வழிப்போக்கரிடத் தில் இல்லையென்றாலம் அவர்கள் துடித்து உயிர்விடுவதைக் காணும் பொருட்டு, அவர்பின் தொடர்ந்து போய் உயிரைக் கொள்வர்கள். இப்படியாக, பறவைகள் கூட துணிந்துச் செல்லாத தனிமையான இடத்தினைக் கடந்து பொருள் தேட நீ செல்கிறாயே எனத் தோழி தலைவனிடம் கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

## முடிவுரை

பதுக்கை என்ற பெருங்கற்காலச் சின்னத்தின் தோற்றமாகக் கருதப்படும் கற்குவியல் பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியத்தில் வம்பலர் பற்றி பேசப்படும் இடங்களில் அதிகம் வருகின்றன. புதிதாக வரும் வழிப்போக்கர் களைக் கொன்று அவர்களின் உடைமை களைக் கவர்ந்து, அவர்களின் உயிரைப் போக்கி அவ்வுடல்களை அங்குள்ள இலை தழைகள் மற்றும் கற்களைக் கொண்டு மறைத்து வைத்தச் செய்தி பொதுவாக அறிந்தவை. ஆனால், ஆறலைக் கள்வர்கள் பொருளுக்காக மட்டும் உயிரைக் கொள்ளாது வெறுமனே தன்னுடைய வில் எய்யும் திறனைக் காட்டவும், அவர்கள் துடித்துச் சாகுவதைக் காண்பதில் மகிழ்ச்சி அடையவும் வழிப்போவோரைக் கொன்றுள்ளனர் என்பதைக் கலனில் வம்பலர் என்ற சொல்லாடல் மூலம் அறிந்துக் கொள்ள முடிகிறது. இவர்கள் கொலைத் தொழிலைத் தவிர வேறொன்றையும் அறியாத கல்லா இளைஞர்கள் என்பதை இக்கட்டுரை ஆராய்ந்துள்ளது.

## அடிக்குறிப்பு

1. பாட்டும் தொகையும், ப-144.
2. கந்தையா பிள்ளை ந.சி., அகநானூறு வசனம், ப-68.
3. வேங்கடசாமி ந.மு., அகநானூறு களிற்றுயானைநிரை மூலமும் உரையும், ப-142.
4. பாட்டும் தொகையும், ப-64.
5. பாட்டும் தொகையும், ப-64.

## துணைநூற்பட்டியல்

1. கந்தையா பிள்ளை ந.சி., **அகநானூறு வசனம்,** ஒற்றுமை ஆபிஸ், சென்னை, 1941 (மூன்றாம் பதிப்பு).
2. கணகசபாபதி தை.ஆ., **கலித்தொகை மூலமும் விளக்கவுரையும்,** பன்னூற்க் கழகம்,1937.
3. சிவசுப்பிரமணியன் மயிலம்.வே., **அகநானூறு நித்திலக் கோவை மூலமும் உரையும்,** உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை, 1990 (முதற்பதிப்பு).
4. ராஜம்.எஸ், **அகநானூறு,** மர்ரே அண்டு கம்பெனி, சென்னை, 1958 (முதற்பதிப்பு).
5. ராஜம்.எஸ், **பாட்டும் தொகையும்,** மர்ரே அண்டு கம்பெனி, சென்னை, 1958 (முதற்பதிப்பு).
6. வேங்கடசாமி ந.மு., **அகநானூறு களிற்றுயானைநிரை மூலமும் உரையும்,** பாரதி பதிப்பகம், சென்னை 2022 (முதற்பதிப்பு).
7. வேங்கடசாமி ந.மு., **அகநானூறு நித்திலக் கோவை மூலமும் உரையும்,** பாரதி பதிப்பகம், சென்னை 2022 (முதற்பதிப்பு).